DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.48/2025

**petitioner side witness: PW–1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருணாகரன் | தொழில்/ பதவி | : கடல் தொழில் |
| த/பெ. | : கருப்பையா | வயது | : 49 |
| ஊர் | : தீட்சிதர் கொல்லை | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**24.03.2026**

(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1) எதிர்மனுதாரர் எனது பெயருக்கு கடந்த 20.02.2025ம் தேதியிட்ட ஆக்சிஸ் பேங்க் இராமநாதபுரம் வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் ரூ.15 இலட்சத்திற்கு வழங்கிய காசோலை (எண் 189466) – அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) கடந்த 20.02.2025ம் தேதியன்று எதிர்மனுதாரர் வழங்கிய காசோலையை எனது வங்கியான யூனியன் பேங்க் ஆப் இந்தியா இராமேஸ்வரம் கிளையில் கலெக்ஷனுக்காக செலுத்தியதற்கான ரசீது அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) நான் கணக்கு வைத்துள்ள யூனியன் பேங்க் ஆப் இந்தியா இராமேஸ்வரம் கிளையில் Payment Stopped by Drawer என காரணக்குறிப்பேடு எனக்கு கடந்த 25.02.2025ம் தேதி வழங்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) கடந்த 21.03.2025ம் தேதியன்ற நான் எனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாருக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) கடந்த 21.03.2025ம் தேதியன்ற நான் எனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாருக்கு பதிவுத்தபால் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்காக அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) கடந்த 26.03.2025ம் தேதியன்ற நான் எனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) எதிர்மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் எனக்கு தேதி குறிப்பிடாமல் அனுப்பிய பதிவு அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாய்ப்பளித்தும் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.03.24 12:25:30 +0530